# விளம்பரம்™
# VLAMBARAM™

☎: 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE



**வீடு விற்பது, வாங்குவது**

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் sales rep.

RE/MAX Crossroads Rlty Inc.

நம்பிக்கை ▲ நேர்மை ▲ திறமை



தி VIII | OCTOBER 15, 1998 | பாலம் 20



- பிளாஸ்ரிக்கினால் பெருஞ்சாலை உருவாக்கலாமா? (பக்கம் 2)
- நீரிழிவு ஒரு நோயா? இவ் வியாதியை விரட்டலாமா? (பக்கம் 4)
- 1999ல் Blue Jays.. உலகப்போட்டிக்கு செல்வார்களா? (பக்கம் 8)
- வீடு வாங்கும்போது நிபந்தனைகளின்றிய ஒப்பந்தத்தில் கையொப்பமிடலாமா?(பக்.12)
- இன்பத்தை எங்கே தேடலாம்? (பக்கம் 3)
- "ஓம்" என்ற வார்த்தை எங்கே தோன்றியது ? (பக்கம் 6)
- ஒரு மனிதனின் (சிவாஜி) வெற்றிக்கு யார் காரணம்? (பக்கம் 7)



வர்த்தகர்கள் வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும்
எமது இன்பத் தீபாவளி வாழ்த்துக்கள்!



**துரித பணமாற்றுச் சேவை**

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ் ☎ (416) 267-8221

**EZ DRIVING SCHOOL**

நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம் பயிற்சி பெற

PL. CALL: JEYAKUMAR



(416) 283-4100

Cell: 822-6741

(9 வருட கால அனுபவ பயிற்சியாளர்)

**SINGAPORE PAGING**



**SUMMER SPECIAL**

$99 + Tax *

Includs MOTOROLA BROVO CLASSIC PAGER + 12 MONTHS AIR TIME

*ONE TIME ACTIVATION $15.00


* * * * * * * * * * * * * * * * * * * * * * * *

**REGULA DEALS**

Motorola Brovo Plus $39.00 Monthly $5.95
Motorola Pronto $60.00 (Annual Price)
Motorola Extra Flex $90.00

Pharmacy/Finch - Daily Needs: 490-7703
Kipling/Steeles Singapore paging 745-2378

**SNR OPTICAL**



அனைத்து டிசைனர் பிறேம்ஸ் மற்றும் கண்ணாடிகள் (Designer Frames & Sunglasses) மேலும் சகல திருத்த வேலைகள் சிறந்தமுறையில் அனுபவமிக்கவரால் செய்துகொள்ள தொடர்புகொள்ளவும். • அரசாங்க உதவியில் உள்ளவர்கள், மற்றும் அனைத்து காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.• 60 வயதிற்கு மேற்பட்டவர்களிற்கு சில வசதிகளுமுண்டு.

ரதி FRAME CONSULTANT (Robert Optician) ☎: (416) 332 9995

**சகல ரக வீடியோக்களும் திருத்துமிடம்**

TV, VIDEO, MICROWAVE OVEN, REMOTE CONTROL, AMPLIFIER நியாயமான விலையில், தரமாகத் திருத்திக் கொடுக்கப்படும். (25 வருட அனுபவம்) கிருபானந்தராஜா (LONDON QUALIFIED)

TEL: 438-9134

FREE ESTIMATE & PICKUP

**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**



Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12

Professional Photographer - கதிர்

☎: (416) 750-8118

2425 EGLINTON AV. E. UNIT 3
KENNEDY/ EGLINTON, SCARBOROUGH

**உடன் யாழ் செல்ல வேண்டுமா!!**

ரொறன்ரோ → கொழும்பு → யாழ்ப்பாணம்

அத்துடன் யாழ் குடா நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் பணம் கொண்டுபோய் கொடுக்கப்படும்

உடன் தொடர்பு கொள்ளவும்.

**சிவா/குகா**

Tel: (416) 438-1382

**AIRPORT SERVICE & MOVING VAN**

ஏயர்போட்டிற்கு பிரயாணிகள் போய்வருவதற்கான சேவைகளும், மற்றும் பொருட்களை இடமாற்றம் செய்வதற்கான சேவைகளிற்கு

☎: (416) 759-0557

**MOVING DELIVERY**

- FOR SMALL OR BIG MOVING
- REASONABLE RATES
- RELIABLE SERVICES

☎: (416) 286-7562

CELLULAR PHONE: 562-7977

**TUITION**

அனுபவம் வாய்ந்த தரமான முதுகலை (M.A.) பட்டதாரி ஆசிரியையினால் KINDERGARDEN இலிருந்து Grade 6 வரையிலான பிள்ளைகளுக்கு Tution சொல்லிக் கொடுக்கப்படும்

PL. CALL: 755-8034

**TUITION**

WESTON / LAWRENCE / JANE பகுதியில் ஒன்ராரியோ கற்பித்தற் தகமையும், அனுபவமும் வாய்ந்த ஆசிரியரால் 8ம் தரம் - OAC வரைக்கும். Math Chemistry, Physics, Science ஆகிய பாடங்கள் அனுபவங்கள் அடிப்படையான கண்டுபிடித்தல் முறைப்படி (Discovery Method) கற்பிக்கப்படும்

Chelva : (416) 614-1122

**DR. B. B. Kalra**

*Family Physician* - (குடும்ப வைத்தியர்)

3268 Finch Ave. E., Scarborough, Ont. (One Traffic light West of Warden)

Tel: (416) 492-9880

எங்களின் சேவைகள்

- வருடாந்த மருத்துவ பரிசோதனை
- குழந்தைப் பராமரிப்புக்கள்
- கர்ப்பப் பரிசோதனைகள்
- குடும்பக்கட்டுப்பாட்டு ஆலோசனைகள்
- பாலியல் நோய்க்குரிய சிகிச்சைகள்
- நோய்த் தடுப்பு ஊசிகள், E.C.G சோதனைகள்
- Allergy தடுப்பூசிகள் அவசியமேற்படின் வீட்டில் வந்தும் நோயாளிகளைப் பார்வையிடுவார்.

*OHIP* உள்ளவர்களுக்கு இச்சேவை இலவசம்




**சிவாகம கிரியா பீடம்**



☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr. , Scarborough, Ont.



VLAMBARAM P O BOX 37527 31 TAPSCOTT RD
SCARBOROUGH, ONT M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978

# அறிவும் ஆக்கமும் (20) - விஜே குலத்துங்கம்



பலவருடங்களுக்கு முன்னர் எமது தாய்நாட்டில் இருந்தபோது தண்ணீர் வாளிகள் எல்லாம் உலோகத்தால் செய்யப்பட்டவையாக இருந்தன. பின்னர் படிப்படியாக பிளாஸ்டிக் (Plastic) வாளிகள் பாவனைக்கு வந்தன. வீட்டில் உபயோகிக்கப்படும் பல பொருட்கள் பிளாஸ்டிக் இனால் செய்யப்பட்டு வந்தன. இந்த 'பிளாஸ்டிக்' குகள் 1940 களில் கண்டுபிடிக்கப்பட்டு பாவனைக்கு வந்தன. ஆரம்பத்தில் காபன் (Carbon) அணுக்களின் கோவைகளினாலாக்கப்பட்ட ஒரு செயற்கை சேதன இரசாயனப் பொருளாக இருந்தது. இவை இலகுவாக வெப்பமேற்றப்பட்டு பல்வேறு வடிவங்களில் உருப்பெறக்கூடியதாக இருந்தது.

சிறிது காலத்துக்குப் பின்னர் இந்த காபன் அணுகோவையுடன் நைதரசன் (Nitrogen) அணுக்கள் சேர்க்கப்பட்டு Nylon உருவாக்கப்பட்டது. இவை பிளாஸ்டிக் ஐ விட வலுக்கூடியதாகவும் வெள்ளை நிறமாகவும் இருந்தது. இவை இயந்திரங்களில் பாகங்களாக உபயோகப்பட்டது. சத்தத்தைக் குறைக்கக்கூடிய கியர்கள் -(Gears Bearings, Valves போன்றவை நைலோன் (Nylon) சேர்வையால் உருவாக்கப்பட்டன. இதன் பின்னர் Phenyl என்ற சேர்வையும் சேர்க்கப்பட்டு, வெப்பம் நெருப்பு போன்றவற்றை தாங்கக்கூடிய சேர்வைகள் உருவாக்கப்பட்டன. இவை Polycarbonate என அழைக்கப்பட்டன. இவற்றுடன் கந்தகம் (Sulfur) சேர்க்கப்பட்டு Sulfone Plastics உருவாக்கப்பட்டன. இவை மிகவும் வலுவுடையதாகவும் நெருப்பு, வெப்பத்தை அதிகளவு தாங்கக் கூடியதாகையால் Smoke Detectorsல் பாவிக்கப்படுகின்றன.

இதைவிட வேறுபொருட்களுடன் பிளாஸ்டிக் (Plastic) கலவை சேர்க்கப்பட்டு உபயோகப்படுத்தப்படுகின்றன. Fibreglass உடன் சேர்க்கப்பட்டு Polyester ஆகவும் மரத்தூளுடன் சேர்க்கப்பட்டு Phenol-Formldehyde ஆகவும், Clay - களிமண்ணுடனும் சேர்க்கப்பட்டு நிலத்தில் போடப்படும் Polyvinyl Chloride Tiles ஆகவும், காற்றுக்குமிழ்களுடன் சேர்க்கப்பட்டு Foam ஆகவும் பாவிக்கப்படுகின்றன.

தற்போது பிளாஸ்டிக் இன் புதிய உபயோகம் ஒன்று விரைவில் பாவனைக்கு வரவிருக்கின்றது. அது என்னவெனில்

**பிளாஸ்டிக் பாலம் Plastic Bridge** ஆகும்

பாலங்கள் அதிகமாக கொன்கிறீட் (Concrete) இனால் கட்டப்படுகின்றன. இதன் பலத்தை அதிகரிக்க இரும்பு (Steel) உபயோகப்படுகின்றது. ஆனால் இந்த இரும்பு துருப்பிடிக்கும் பிரச்சினை நெடுங்காலமாக இருந்து வருகின்றது. கனடாவில் Concrete இனுள் இருக்கும் இரும்பு துருப்பிடித்தலை நிவர்த்தி செய்ய தற்போது உள்ள நிலையில் 44 பில்லியன் டொலர் தேவைப்படும். Toronto விலுள்ள Gardiner Express Way ஐ உபயோகிப்பவர்கள் வருடாவருடம் இது பகுதி பகுதியாக திருத்தியமைக்கப்படுவதைக் காணலாம். இந்த பெருஞ்சாலையானது Concrete பாலத்தின் மேலேயே அமைந்துள்ளது. இந்த Concrete இலுள்ள இரும்பு துருப்பிடித்து பழுதடைவதால் அவை பிரதியீடு செய்யப்படுகின்றன. அமெரிக்கா வருடாவருடம் துருப்பிடிக்கும் இரும்பை பிரதியீடு செய்ய 10 பில்லியன் டொலர்களை செலவிடுகின்றது.

தற்போது இந்த Concrete இலுள்ள இரும்புப் பிளாட்டிக் இனால் பிரதியீடு செய்வதில் உலகநாடுகளில் கனடா முன்னிற்கின்றது. எதிர்காலத்திற்கு இந்த முறையே பொருத்தமானது என ISIS எனப்படும். Intelligent Sensing for Innovative structures என்ற நிறுவனத்தின் தலைவரான Dr. Sami Rizkalla கூறுகின்றார். இந்த நிறுவனம் சென்ற ஆண்டு மத்திய அரசினால் நிறுவப்பட்டது. பல சர்வகலாசாலை பேராசிரியர்களும், தனியார் தொழிற்சாலைகளை சேர்ந்த நிபுணர்களும் கூட்டாக இந்த நிறுவனத்துடன் பல கட்டுபிடிப்புகளை செய்து வருகின்றார்கள். இவர்கள் கண்டுபிடித்த துருப்பிடிக்காத இந்த Plastic ஆனது Fibre Reinforced Plastic (FRP) எனப்படும். கண்ணாடி அல்லது காபன் (Carbon) நார்கள் - Fibres Plastic உடன் சேர்க்கப்பட்டு வலுவான பிளாஸ்டிக் bar கள் உருவாக்கப்படுகின்றன.

இந்த FRP Plastic இரும்பை விட ஐந்து மடங்கு வலுவானதாக இருக்கின்றது. தலைமயிர் அளவான நார்கள் - Fibre இரசாயன தாக்கம் மூலம் உருவாக்கப்படுகின்றதால் மிகவும் வலுவானதாக இருக்கின்றது. இரும்பைவிட 5 மடங்கு வலுவானதாக இருந்தாலும், இரும்பைவிட நிறையில் 1/4 பங்காக இருக்கின்றது. ஆனால் இந்த Plastic ஐ விட இரும்பானது ஒருவிதத்தில் சிறந்தது என John Bonacci என்ற ரொரன்ரோ பல்கலைக்கழகத்தை சேர்ந்த Civil Engineering பேராசிரியர் கூறுகின்றார். அது என்னவெனில் இரும்பானது முறியும் நிலையை அடையமுதல் அது வளைந்து கொடுக்கு. பொறியியலாளர் அதைத் திருத்த போதிய அளவு காலத்தை கொடுக்கின்றது. ஆனால் FRP பிளாஸ்டிக் விரைவில் முறிந்து விடும். ஆனாலும் தற்போது மிகவும் சக்திவாய்ந்த Sensors-உணர்த்திகள் உள்ளன. இவை Fibre Optic Sensors பாலத்தின் பல பகுதிகளில் வைக்கப்பட்டு, இவை முன்கூட்டியே பாலத்தின் நிலைமையை அறிவிக்கக்கூடியதாக உள்ளது.

இந்த FRP ஐ ஒத்த பிளாஸ்டிக்குகள் ஏற்கனவே டென்னிஸ் மட்டைகள், Golf மட்டைகள் மற்றும் விமான பாகங்களிலும் உபயோகிக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் இவை ஏற்கனவே இருக்கும் பாகங்களின் அடிப்பகுதிகளில் இந்த FRP மெல்லிய தகடுகளாக செய்யப்பட்டு, பொருத்தப்படும். இதனால் போக்குவரத்து பாதிக்கப்படமாட்டாது. மேலும் பாலத்தின் தூண்களை சுற்றியும் இவை Wallpaper போன்று பொருத்தப்படும். இதன்மூலம் இவற்றின் தற்போதைய வலு 50-60 வீதம் அதிகரிக்கும்.

ISIS கனடா தற்போது வினிபெக் (Winnipeg) ஐ Manitoba விலுள்ள Headingly பகுதியை இணைக்கும் Headingly பாலத்தை திருத்துவதில் முயன்று வருகின்றது. தற்போது கனடாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிளாஸ்ரிக் பாலம் (Plastic Bridge) மிகவிரைவில் அமெரிக்காவிலும், ஜப்பானிலும் அறிமுகப்படுத்த இருக்கின்றன.

*************************************************************

***"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.***



புதிய நிர்வாகத்தின் கீழ்

**Markham / Sheppard** பகுதியில்

**NEW SPICELAND**

☎ : 292-0086


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 88



சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "ஸ்பைஸ் லாண்ட்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் October 28, 98க்கு முன்னர் கிடைக்க வேண்டும்.

Address: **P.O.Box 37527, 31 Tapscott Rd., Scarborough, Ont. M1B 5P9**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பி | ரா | ன் | ஸ | ■ | கு | ரு | ப |
| ர | ■ | தி | ■ | தீ | ம் | ■ | ந் |
| மா | ■ | ■ | ன் | ■ | ப | ■ | த |
| த | ண் | ட | வா | ள | ம் | ■ | ய |
| ம் | ■ | ■ | ய | ■ | ■ | ■ | ம் |
| ■ | பு | ■ | தி | த | ன | ம் | ■ |
| மி | தி | ■ | த் | ■ | ■ | ட | ■ |
| து | ர் | வா | ச | ர் | ■ | வ | கு |

**இடமிருந்து - வலம்**

1. அமெரிக்கா அண்மையில் பழிவாங்கு முகமாக இந்நாட்டில் எறிகணை தாக்குதல்களை நடத்தியது
4. ஒரு நட்சத்திரம்
6. தங்கு (வல - இட)
7. மனைவி (வல - இட)
8. சிங்கம் (வல - இட)
9. சோலை
10. வாய் குறுகிய உருண்டையான பாத்திரம்
11. சித்திரம் எழுது
12. பெண்
13. அறிவும் பெருந்தன்மையும் உடையோர் (வல - இட)

**மேலிருந்து கீழ்**

1. பாற்கடலில் வந்த நஞ்சு
2. சரஸ்வதி
3. ஒரு செடி
5. ஒன்று சேர்
7. இளம் பெண்கள் அணியும் மேலாடை (கீழ் -மேல்)
8. தாய்
11. இனம்
12. நாலில் ஒரு பகுதி (கீழ்-மேல்)
13. வேட்டியுடன் சேர்த்து அணிவது

**#87இல் வெற்றி பெற்றோர்**

1) Vasanthan s., Toronto
2) R.K. Senthilruban, Scarborough


நியூ ஸ்பைஸ்லாண்ட்

5800 Sheppard Ave. E.

Unit #16 Scarborough, Ont.

**நியூ ராஜன் சலூன்**

உங்கள் அழகு கூந்தலை மேலும் அழகுபடுத்த நகரில் புதியதோர் நிறுவனம்

* பெரியவர்கள் -$9.00
* சிறுவர்கள் $7.00
* வயது வந்தவர்களுக்கு விஷேட கழிவு



செவ்வாய் தொடக்கம் ஞாயிறு வரை 10:30 Am - 7:30 Pm


ராஜா - ☎ (416) 741-9198

PAGER (416) 739-2393

5010 Steeles Ave. W., #19, (Kipling /steeles)

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing






**Repairs**
safety certification
overall maintenance
under coating &
Rust proofing

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

☎ [416] 285-4998

முகவரி: 2500 LAWRENCE AVE. EAST, UNIT #11
SCARBOROUGH, ONT. ( MIDLAND & LAWRENCE )



*We are entering 7 th year service in Scarborough.*



## Better Work ... Less Money

**N.T.E Auto Inc.**
New Trade Engineering

We service
EUROPEAN , JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.


**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**

We will reduce the worry and expense of maintaining your car by offering:

- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

என். ரி. ஈ. ஓட்டோ இங்.

**AUTO INC.**
New Trade Engineering




151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎(416) 750 - 1573
SIVABALAN





## குடும்ப பல்வைத்தியர்
## Family Dentist

Dr. Mahin Pouyan

உங்கள் முழுக் குடும்பத்திற்கும் பல் சம்பந்தமான சிகிச்சைகளிற்கு 18 வருட காலம் அனுபவமும், City of NorthYork Public Schools Board of Education ஆல் தெரிவு செய்யப்பட்ட பல் வைத்தியர் **Dr. Mahin Pouyan** ஐ நாடுங்கள்

☎: (416) 225-5522

* ஞாயிற்றுக் கிழமைகளிலும் சிகிச்சை [illegible]

263 Finch Ave. E. (Finch & Bayview), North York, Ont. M2N 4S1



**Pillayar Traders**

SRILANKAN . EAST & WEST INDIAN
GROCERIES & TEXTTILES
3630 LAWRENCE AV. E., SCARBORO
☎ : 438-7746


### விஷேச போட்டி இல. 78

சதுரப் பெட்டிகளில் காணப்படும் எழுத்துக்களைக் கொண்டு பல சொற்களை உருவாக்கலாம். அவற்றில் 12 சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பு | ரு | ச் | ன | ர | கை | உ | ஆ |
| ன | வ | இ | ய | ம | லி | மு | தா |
| மா | ர் | சி | கு | ஜ | ளி | றோ | மை |
| ள | கூ | டா | ண | ஓ | ம் | பை | ழ் |
| ரி | ட | பு | ஈ | ஏ | ந் | யூ | எ |
| வி | டு | அ | று | க | ப | ஊ | ழ |
| பா | ல் | ல | ட் | ரா | லா | கா | வு |
| தி | ன் | ற | து | கி | ப் | த | மை |

மேற்காட்டப்பட்ட சதுரப்பெட்டிகளில் பல சொற்கள் தலை கீழாக, சீராக, இடம் வலமாக, குறுக்குப்பாடாக (diagonal). நாலு மூலை வழியாகவும் அமைந்துள்ளது. இவற்றை இனம்கண்டு பினவருவனவற்றிற்குரிய விடைகளை November 12, 98 ற்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**# 77ன் விடைகள்**

1. கௌரிமனோகரி, ரேவதி, வசந்தா, சரஸ்வதி, சண்முகப்பிரியா, கல்யாணி
2. மைனா, குயில், மயில், ஆந்தை, பருந்து கொக்கு, மரக்கொத்தி

பரிசு பெற்றோர்:

1) S. Sharmila, Donmills
2) K. Nishanthini, Scarborough

**பரிசுகள்:** பிள்ளையார் ரேடர்ஸ் இல் பாவிக்கக் கூடிய இரண்டு($15, $10) பெறுமதியான vouchers (இவற்றிற்கு cash value கிடையாது)

**விதிகள்:** ஒருவர் எத்தனை முறையும் முயற்சிக்கலாம். பிள்ளையார் ரேடர்ஸ், விளம்பரம் ஊழியர்கள் பங்குபற்ற முடியாது. விளம்பரம் குழுவின் முடிவே இறுதியானது.

# அருள் விருந்து

(சென்றஇதழ் தொடர்ச்சி)

*-செ. சிவசுப்பிரமணியம்*


80. உள்ளத்தில் உறுதியை உண்டு பண்ணுவது எல்லாம் சமயக் கோட்பாடு ஆகும்.
81. எல்லாம் இறைவன் செயல் என்று உணர்பவருடைய உள்ளத்தில் துன்பத்தைப் பற்றிய உணர்ச்சியில்லை.
82. நீ பித்தம் பிடித்தவன் ஆக வேண்டியிருந்தால் கடவுள் பித்தம் பிடித்தவன் ஆகும்.
83. படிவு என்னும் பயிற்சி இளைஞர்களுக்கு அமையாவிட்டால் நாடு முன்னேற்றம் அடையாது.
84. துன்பங்கள் அனைத்தையும் அகற்றுதற்கு இயற்கைத் தாய் நல்கும் மருந்தொன்று உண்டு முகமலர்ச்சி.
85. பிரார்த்தனையின் வாயிலாக நமது மனதை நாம் பெருநிலைக்குப் பணிவுடனும் அன்புடனும் அழைத்துச் செல்லுகிறோம்.
86. பிறர் பொருட்டு உழைத்தல் மூலம் உன்னை நீ மறக்குமளவு, நீ தெய்வ சந்நிதியத்துக்குப் போகிறாய்.
87. பயணத்தின் முடிவுக்கு வந்தவனுக்குத் துன்பமில்லை. வாழ்வு என்னும் பயணத்தின் குறியை அடைந்தவனுக்குப் பந்தமில்லை.
88. இயற்கையில் ஒவ்வொன்றும் புறப்பட்ட இடத்துக்கே வந்து சேருகிறது. வெறுப்பு வெறுத்தவனிடம் வந்து சேருகிறது.
89. இன்பத்தை இவ்வுலகில் தேடியலைவது வீண். அது உன்னிடத்திலேயே இருக்கிறது.
90. தற்செயலாய்க் கிடைத்த செல்வத்தைக் கொண்டு மனிதன் உலகத்தைச் சிறிது காலம் ஆளலாம். பெரு வாய்ப்பாய்க் கிடைத்த அன்பைக் கொண்டு உலகை எப்பொழுதும் ஆளலாம்.
91. மனச் சோர்வு என்பது நரகத்தின் முதற்படி உற்சாகம் என்பது சொர்க்கத்தின் வாயில்.

*(தொடரும்)*

# ஆரோக்கிய வாழ்வு (20) - N. செல்வசோதி



## சலரோகம் நீக்கும் சலவாசனம்



மனிதனைப் பீடிக்கும் மிகவும் கொடிய வியாதிகளில் ஒன்றுதான் சலரோகம் என்று சாதாரணமாக அழைக்கப்படும் நீரிழிவு நோய். இதனை ஒரு நோய் என்று அழைப்பதைவிட உடலில் ஏற்படும் ஒரு நிலை என்று கூறுவது தான் பொருத்தமாகும்.

இன்று இவ்வியாதி இளையவர் முதல் முதியவர் வரை நம்மிடை வந்தடைகிறது. இதன் அறிகுறிகளைக் கண்டறிந்ததும் இடையிடையே வைத்தியர்களிடம் செல்வதும் இடைவிடாது மாத்திரைகளைப் பாவிப்பதும் பற்பல இனிப்புக் கலந்த உணவு வகைகளை உண்ணாது தவிர்த்து வருவதும் சாதாரண நடைமுறைகளாகிவிட்டன.

இக்கொடிய வியாதியை விரட்ட சித்தர்களும் நமக்களித்த விஞ்ஞானங்கள் தத்துவங்கள் இருக்கின்றன. இவற்றுள் முக்கியமான தொன்றுதான் "சலவாசனம் " என்னும் யோக சிகிச்சை முறை. இதனை முறைப்படி தினமும் செய்வதுடன் சில பழக்க வழக்கங்களை நடைமுறைப்படுத்தி குறிப்பிட்ட உணவுத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வந்தால் நோயை விரட்டியடிக்கலாம்.

### சலவாசனம் (செய்முறை)

1. உணவு உட்கொண்டு குறைந்தது 4 மணி நேரம் கழித்துத்தான் பயிற்சி செய்தல்.
2. தரையில் குப்பற வயிற்றில் படுத்திருத்தல்
3. இடுப்பின் கீழுள்ள பகுதிகளை அதாவது இரு தொடைப்பகுதிகளை, கால்களை நீட்டியவாறு மேலே தூக்கவேண்டும் (படத்தில் காட்டியபடி)
4. 10 முதல் 15 வினாடிகள் தூக்கிய நிலையில் படுத்திருப்பது. பின் சற்றுநேரம் ஓய்வு எடுத்துக் கொள்வது.
5. இதனை திரும்பவும் மூன்று முதல் 5 தடவைகள் செய்தல்.

இவ்வாசனத்தை சில நாட்கள் தொடர்ந்து செய்யும் போதே சில நல்ல அறிகுறிகள் தென்படத் தொடங்கும் இதை யோக சிகிச்சை முறை நீரிழிவு நோய்க்கு மருந்தாக அமைவதோடு மட்டுமல்லாது சிறுநீரகம் சம்மந்தமான பல பிரச்சினைகளுக்கு நிவாரணமளிக்கிறது. சிறுநீரகத்தில் உற்பத்தியாகும் கற்படிவுகளை தங்கவிடாது கரைத்து விடுகிறது. சமிபாடின்மையை சரி செய்கிறது.

**எச்சரிக்கை** - இருதய வருத்த நோயாளிகள் இவ்வாசனத்தை செய்தல் ஆகாது.


**Neelam SILK**

வட அமெரிக்காவில் உயர்ந்தரகப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை

**நீலம் சில்க்**

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 6வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும்

நீலம் சில்க்கின் 1998ம் ஆண்டிற்கான

புதிய வருகைகள்

- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை (Tie & Die) சாறி
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்



கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)



**யோகாசன வகுப்புக்கள்**

அனுபவமிக்க ஆசிரியரால் பிரதி ஞாயிறு தோறும் காலை MARKHAM / ELLESMERE இற்கு அருகாமையில் அமைந்திருக்கும் வோபன் கொலிஜியேற்றில் (Woburn Collegiate) நடாத்தப்படுகின்றது.

மேலதிக தொடர்புகளுக்கு சத்தி : **291-585**



**கலைமகள் புத்தக நிலையம்**

- சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
- தமிழ் புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல


595 PARLIAMENT ST.
TORONTO. ONT.
☎: (416) 944-1818

துரித பணமாற்றுச் சேவை

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

# நிம்மதி ஒரு நிதி



-ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி, பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இன்று தமிழினம் சில நாடுகளிலே சூழ்நிலை கைதிகளாகி மிகவும் நெருக்கடியான நிலையடைந்து அந்தந்த நாட்டின் உதவிப் பணத்தில் வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளது மிக வருந்தத் தக்கதே. உலக நாடுகளுக்கே மக்களுக்கே வழி காட்டியாய் வாழ்ந்த தமிழ் இனம் இன்று இப்படி ஒரு நெருக்கடியான கட்டத்திற்குள்ளானது மிக வருந்தப்பட வேண்டியதொரு நிகழ்வாகும். என்ன இருந்தாலும் மற்ற நாட்டை, அரசுகளை நம்பியிருக்கும் நிலையை மாற்றி கூடிய விரைவில் பொருளாதார விடுதலை பெறுவது மிகமுக்கியம். பழக்கம், வழக்கமாகிவிடும். ஆகவே கூடிய சீக்கிரம் இந்த நிலைமாற உழைப்போமாக.

விதி, வினை, பாவம், புண்ணியம் இவை யாவும் மனிதனை வெகுவாக பாதிக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் ஒன்றும் அறியா பச்சை பிள்ளையாகவே பிறக்கிறான். ஒன்பது கிரகங்களால் ஆக்கப்படுகிறான். அதேவேளை ஒன்பது கிரகங்களால் ஆளப்படுகிறான். சூரியன் 6, சந்திரன் 10, செவ்வாய் 7, ராகு 18, வியாழன் 16, சனி 19, புதன் 17, கேது 7, வெள்ளி 20 வருடங்கள் என 120 வருடங்களுக்கு கிரகங்களால் அவனவன் முற்பிறவியில் செய்த நல் தீவினைகளுக்கேற்ப கிரக அமைப்புடன் பிறக்கிறான். முற்பிறவி வினைப்பயனால் சில நோய்களையும் கூடவே கொண்டு வருகிறான் என்பதும் மிகவும் தெளிவாகிறது இதனால் ஒருவனுக்கு மறுபிறவியுடண்டென்பதும் உறுதியாகிறது. வள்ளுவரின் குறளில் **"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற் கெழுமையும் ஏமாப் புடைத்து"** என்ற குறள் இதை மிகவும் வலியுறுத்துகிறது. ஒரு பிள்ளை பிறக்கும் போது லக்கினத்திற்கு 6-8-12 வீடுகளில் சந்திரன் நின்றால் அப்பிள்ளைக்கு நீரோடு சம்பந்தப்பட்ட (நீரிழிவு, தொய்வு) நோய்கள் நிச்சயம் வரும் என்று ஜோதிட நூல்கள் 10,000 வருடங்களுக்கு முன்பே தெளிவாய் அறிவுறுத்தியுள்ளது. அதேபோல் ஒருவன் ஜாதகத்தில் 8ம் வீட்டிற்குரிய மாங்கல்யகாரகன் மறைவு ஸ் தானங்களாகிய 6-8-12 ல் மறைந./து இருக்கும் போது 40 வயதிலும் கூடி திருமணம் இன்றி இருப்பதைக் காணலாம். ஒரு சிலருக்கு இந்தியதியை மீறி திருமணம் நடந்திருப்பின் வாழாவெட்டியாக வாழ்ந்திருப்பர். இதிலும் நாம் சிறிது உற்று நோக்க வேண்டியது **"நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய் செய்யார் நோயின்மை வேண்டு பவர்"** என்ற குறளால் நோய் அதாவது இதில் நோய் என்பதை துன்பம் என்று விளக்குகிறார்.

அதாவது துன்பம் செய்தவர் மேலே பலவித துன்பம் வந்து சேரும். துன்பம் செய்யாதவர் துன்பம் இன்றி வாழ்வர். ஆகவே இதிலிருந்து நாம் முற்பிறவியில் செய்யும் துன்பம் பாவங்களால் இந்தப் பிறவியும் தாக்கம் அடைகிறது, நாய்க்கு எங்கு எடுத்தாலும் காலை நொண்டுவது போல் மனிதனுக்கு எந்த துன்பம் வந்தாலும் அதாவது மனஅமைதி, விலை மதிப்பற்ற நிம்மதியே கெடுகிறது. நான் மீண்டும், மீண்டும் சொல்கிறேன் நிம்மதியாய் உள்ளவர்களுக்கு நிம்மதியின் அருமை தெரியாது அவர்கள் கொடுத்து வைத்தவர்கள். நிம்மதியாய் அமைதியர் சாந்தியாய் வாழ்கிறார்கள் அந்தப் பாக்கியவான்கள். ஆனால் இன்னொருபுறம் நிம்மதியின்றி துடிதுடித்து பெருந்துன்பத்தில் வாழ்பவரிடம் போய்கேட்டால் நிம்மதியின் அருமையை விளக்குவார்கள். ஆகவே நான் அறிந்த மட்டில் ஆண்டவன் சந்நிதியே மனிதனுக்கு மனநிம்மதியைக் கொடுக்கமுடியும். **"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது."** என்று சொன்னார் வள்ளுவர் பெருந்தகை. சிந்தையை உலகம் சுழல்கிறது. கடிகாரம் அசைகிறது, சந்திர சூரியரும் மற்ற கிரகங்களும் பூமியை ஆகர்சிக்கின்றன. வசந்தம், கோடை, இலையுதிர், மாரிகாலமென பருவ காலங்கள் வந்து போகின்றன. இதற்குள் மனிதன் சிக்கி இந்த வேகத்தில் இவன் மனமும் வேகமாக வேலை செய்கிறது. புத்தர் சொன்னது போல் விநாடிக்கு மனித மனம் 52 தரம் மாறுதலடைகிறது. மனதைக் கட்டுப்படுத்துவது என்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. சும்மாயிரு, சும்மாயிரு, சும்மாயிரு என்று இரண்டு சொற்களில் சொல்லி விடலாம் யாரும். அதை சொன்னவரே சும்மாயிருந்திருக்க பகீரதப் பிரயத்தம் செய்திருப்பார் என்பது உறுதி. இதையறிந்து தான் நம்முன்னோர்

'கந்துக மதகரியை வசமாய் நடத்தலாம்
கரடி வெம்புலியின் வாயையும் கட்டலாம்.
ஒரு சிங்கமுதுகின்மேல் கொள்ளலாம்.
ஒருவர் கண்படாமல் உலகத்தில் உலவலாம்.
கனல் மேல் நடக்கலாம். புனல்மேல் இருக்கலாம்.
கூடுவிட்டுக் கூடி பாயலாம். ஐந்து லோகத்தையும் வேதித்து விற்று
உண்ணலாம்.

சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது, அரிது, காண் சத்தாகி என் சிந்தை மிசை குடி கொண்ட மெய்யான தெய்வமே தேசோமயானந்தமே! என்று அந்த பாடல் கூறுகிறது எவ்வளவு கஷ்டம் நிம்மதியாய் வாழ்வது என்பது இதில் இருந்து புரிகிறதல்லவா.

மனிதனை மனிதராக்குவது பணமோ பதவியோ அல்ல என்பதை நீங்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். மனிதனை மனிதன் ஆக்குவது, தோல்வி, முயற்சி, துன்பம், துயரங்களே என்பதை மறக்க கூடாது. பாலைக் காய்ச்சும் போதும், வைரம் பட்டம் வெட்ட வெட்டவும், பொன் சுட சுடவும் மேலும் உயர்வடைகின்றன. அதே போல்தான் மனித உள்ளமும், துன்பம் துயரங்களை சந்தித்து புண்பட்டு, அப்புறம் பண்படும் போது மனிதன் மகானாகவும் தெய்வமாகவும் மாறி விடுகிறான். மனம் என்பது ஒரு மிகவிசித்திரமான, விநோதமான உணர்வு,. சிந்தை, மனம், எண்ணம், உள்ளம் (Mind) இவற்றிற்கு உருவமில்லை. ஆகவே உருவம் இல்லாத ஒரு வினோதமான உணர்வே மனம். அதை எவன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க பழகிக் கொள்கிறானோ மனம் போன போக்கில் போய் மனதிற்கு அடிமையாகாது மனதை தனக்கு அடிமையாக்கி எவன் வாழக்கற்றுக் கொள்கிறானோ அவன் கோடிஸ்வரனை விட ஒரு படி உயர்ந்தவனாகிறான். கோடிஸ்வரனிடம் பணம் மட்டும் உண்டு. அவன் மனம் அவன் கட்டுப்பாட்டிற்குள் இல்லவே இல்லை இது சத்தியம். நிச்சயம் நம்புங்கள். கோடீஸ்வரனால் தன் மனதை கட்டுப்படுத்தாமல் போகும் போது பெரும் மன அமுக்கத்தால் துயரத்தால் (Depression) தற்கொலை செய்திருக்கிறார்கள். அவர்களுடன் ஒப்பிடும் போது நீங்கள் துன்பம், துயரம் தோல்வி யாவையும் எதிர்நீச்சல் போட்டு வெற்றிவாகை சூடி வையத்தில் வாழ்வாங்கு வாழ்வீர்களானால் யார் கோடிஸ்வரர்? நீங்கள் தான் சந்தேகமில்லை ஆகவே நீங்களும் மனதால் நிம்மதியால் கோடிஸ்வரராகலாம். (தொடரும்)


TAMIL INSURANCE CLAIMS CONSULTANT
"தமிழில் இலவச ஆலோசனை"
வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?
* தகுந்த ஆலோசனை * சட்ட உரிமைகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடு
* உரிய நஷ்டஈடு * மற்றைய இழப்பீடு
* மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும், அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்தமுறையில் பெற்றுக்கொள்ள
ரவி நடராஜா (12 வருட கால அனுபவமுள்ளவர்)
தொடர்புகொள்ளுங்கள்: TEL: (416) 245-6555
FAX: (416) 245-7766
2095 Weston Rd., #201 (South of HWY 401), Toronto, Ont. M9N 1X7



நான் ஒரு வழக்கறிஞர் இல்லை.

குடிவரவு சட்டம் IMMIGRATION LAW
* அகதி நிலை விண்ணப்பம்
* மேன்முறையீடு
* ஸ்பொன்சர்
குற்றவியல் சட்டம் CRIMINAL LAW
விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ACCIDENT VICTIMS
ஆகியவற்றில் அனுபவமுள்ள வழக்கறிஞர்களுடன் மொழிபெயர்ப்பாளராகவும், உதவியாளராகவும் தொழில்புரிகின்றேன்.
உங்களுக்குத் தேவையான சட்டசம்பந்தமான உதவிகளுக்கு

தொடர்பு கொள்ளுங்கள்...> எஸ்.கே. தீசன் (416) 631-6322



IMMIGRATION CONSULTANT
Christina Staden, M.A.
Member of the Association of Immigration Counsel of Canada
18 years experience
Free assessment, LOW COST,
money back guarantee*
Tel. Toronto (416) 222-5254 Mississauga (905) 501-0307
9AM.-9P.M.

நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU

Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்பாளர்களின் தரமான பொருட்களின் அணியில், மேலும் ஒரு நாவிற்கினிய படைப்பு!

இதோ!




நிரு பிராண்ட் பரிசுத்திட்டத்தின் கீழ் கெட்டிப்பால் லேபல்களுக்கு 10 புள்ளிகள் வழங்கப்படும்.

சுவையின் தரத்தை ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள்

நிரு பிராண்ட் "கெட்டிப்பால்"

தரமான நிரு பிராண்ட் தயாரிப்புகள் கனடிய சுகர்தார விதிகளுக்கமைய தயாரிக்கப்படுபவை.

சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

Niru Enterprise Inc., Scarborough, Ontario Tel: (416) 299-4202

நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU

பிரபஞ்சம் 16

# விண்வெளி

தருபவர் - கனி

இதுவரையில் Singularity என்ற தனிமம் இருந்திருக்கக்கூடும் அல்லது இருந்தது என்ற முடிவுக்கு விஞ்ஞானிகள் எவ்விதம் வந்தார்கள் என்பதனைப் பார்த்தோம். இன்றில் இருந்து வரும் நாட்களில் ஆரம்பத்தில் இருந்த இப்பிரபஞ்சம் என்ன என்ன மாற்றங்களை அடைந்தது, எந்த எந்த வடிவங்களை அமைப்புக்களை கொண்டிருந்தது என்பவற்றைப் பார்ப்போம். அத்துடன் இடையிடையே நமது மத நம்பிக்கைகளுடன் இவை அப்படி ஒத்துப் போகின்றன அல்லது முரண்படுகின்றன என்பவற்றையும் பார்ப்போம்.

சுமார் 15 பில்லியன் வருடங்களின் முன் இத்தனிமமானது ஒரு பெரிய வெடிப்புக்குள்ளானது. இந்நிகழ்வையே Big Bang என்கிறார்கள். அந்த வெடிப்பின் காரணமாக எழுந்த பிரமாண்டமான ஒலியானது இன்றும் பிரபஞ்சம் முழுவதும் ஒலித்துக் கொண்டே இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். ஆனால் 15 பில்லியன் வருடங்களாக ஒலித்துக் கொண்டே இருப்பதாலும் அத்துடன் பிரபஞ்சமானது பிரமாண்டமான அளவில் விரிவடைந்து கொண்டே செல்வதாலும் அவ்வொலியின் ஒலிச் செறிவு மிகவும் குன்றி இன்று சாதாரண காதுகளால் கேட்க முடியாது இருப்பதாக உள்ளது. இவ்வொலியை எவ்விதம் கண்டு பிடித்தார்கள்? அது எப்படி இருந்தது? என்று பார்ப்போம்

1965ம் ஆண்டு அமெரிக்காவில் பென்சியஸ், வில்சன் எனும் இரு விஞ்ஞானிகள் உயர் உணர்திறன் கொண்ட ஒலிவாங்கியை பரீட்சித்துக் கொண்டு இருக்கும் போது அவர்களது கருவியானது அவர்கள் எதிர்பார்த்த அளவு சத்தத்தை விட அதிகளவு சத்தத்தை வாங்கிக்கொண்டது. இந்த மேலதிக சத்தத்தால் குழம்பிய அவர்கள் அதன் பிறப்பிடத்தை அறிய முற்பட்டனர். இந்த சத்தத்தை வேறாக்கி ஆய்வுகள் செய்தபோது அவர்கள் தற்செயலாக கண்டுபிடித்த உண்மை பிரபஞ்சத்தின் பெரிய புதிரை விடுவித்ததுடன் அவர்களுக்கும் நோபல் பரிசைப் பெற்றுக் கொடுத்தது. அந்த மேலதிக சத்தமானது பூமியின் எந்தப் பகுதியிலும் கேட்கக் கூடியதாக இருந்தது. அத்துடன் எல்லாத்திசைகளிலும் இருந்து வந்து கொண்டு இருந்தது. பூமியின் வளிமண்டலத்திற்கு வெளியே சூரியக் குடும்பத்திற்கு வெளியே நமது Milky Way கலக்சிக்கு வெளியே என எல்லா இடத்தில் இருந்தும் வந்த இந்த ஒலியானது Big Bang வெடிப்பின் போது எழுந்த சத்தம் என இனங்காணப்பட்டது. இந்த சத்தத்தை பெரிதாக்கிக் கேட்ட பொழுது அது கிட்டத்தட்ட "ஓம்" என்ற சத்தத்தில் கேட்டது.

சரி இப்பொழுது நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள் அல்லது குழம்புவீர்கள்! அப்படித்தானே? எந்தவொரு தமிழனுக்கும் (அவன் எந்த மதத்தவனாக இருந்தாலும்) இந்த "ஓம்" என்ற சொல் நன்கு பரீட்சயமானது. ஆயின் உங்களுக்குள்ளும் சில கேள்விகள் எழலாம். முதன்முதலில் TLC இல் இந்த சத்தத்தைக் கேட்ட பொழுது நானும் ஆச்சரியப்பட்டேன். "இந்த 'ஓம்' எனும் சத்தம் அல்லது மந்திரத்தில் இருந்து தானே பிரபஞ்சத்தின் யாவும் தோன்றின" என்று இந்துக்களின் கொள்கை கூறுகிறதே என்பதுதான் எனது நினைவுக்கு முதல் வந்தது. 1965ம் ஆண்டின் பின் வலிமையான ஆதாரங்களுடன் விஞ்ஞானிகளால் கூறப்பட்ட Big Bang ஒலியானது எவ்விதம் இந்துக்களின் மந்திரத்துடன் ஒத்துவந்தது? இதனை யார் இந்துக்களுக்குக் கொடுத்தார்? பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே எவ்விதம் இந்த "ஓம்" என்ற பிரணவம் இந்துக்களிடம் வந்தது?

"ஓம் எனும் பிரணவம் தந்த காளி" என்ற பதம் கூட இந்துக்களிடம் உண்டு. இதில் ஓம் காளியைத் தந்ததா? அல்லதி காளி ஓம் என்பதைத் தந்ததா? (மீண்டும் முட்டை - கோழி கதை என்று பார்க்கிறீர்களா?) காளியை சக்தியின் வடிவம் எனக் கூறினால் இதன் விடையை அடுத்த தடவையில் விஞ்ஞான ரீதியில் பார்க்கலாம்.

இந்த ஓம் என்ற சத்தத்தை வார்த்தையாக கருதினால் கிறிஸ்தவம் கூட இதனைப்பற்றிக் குறிப்பிடுவதாக எனக்குத் தெரிகிறது. விவிலியத்தல் "ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை தேவனோடிருந்தது' அந்த வார்த்தை தேவனாயிருந்தது. வார்த்தை மாம்சமாகியது என்றெல்லாம் குறிப்பிடப்பட்டு இருப்பதை நாம் காணலாம். இவை கூட எவ்வளவோ காலத்தின் பின் கூறப்பட்டவையே.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

–தொகுத்துத் தருபவர் - பரம்

| | | |
|---|---|---|
| 1938 | 1. அநாதைப் பெண் | 2.அதிஷ்ட நட்சத்திரம் |
| | 3. என் காதலி, முட்டாள் மாப்பிள்ளை (இரு பாகங்கள்) | |
| | 4. ஏசு நாதர் | 5. கம்பர் (கல்வியின் வெற்றி) |
| | 6. கந்த லீலா | 7. கண்ணப்பநாயனார் |
| | 8. குற்றவாளி | 9. சுவர்ணலதா |
| | 10. சேவாசதனம் | 11. தட்சயக்ஞனம் |
| | 12. தசாவதாரம் | 13. தாயுமானவர் |
| | 14. துளசி பிருந்தா | 15. துகாரம் |
| | 16. தெனாலிராமன் | 17. தேசமுன்னேற்றம் |
| | 18. நந்தகுமார் | |
| | 19. பக்த மீரா / ஷோக்சுந்தரம் கிராம விஜயம் (இரு பாகங்கள்) | |
| | 20. பக்த நாம தேவர் | 21. பஞ்சாப் கேசரி |
| | 22. பாக்ய லீலா | 23. பூகைலாஸ் |
| | 24. போர்வீரன் மனைவி / அசட்டு வீரன் மனைவி (இரு பாகங்கள்) | |
| | 25. மட சாம்பிராணி | 26. மயூரத்துவஜா |
| | 27. மாயாமாயவன் | 28. யயாதி |
| | 29. ராஜதுரோகி | 30. ராமானுஜர் |
| | 31. வனராஜ கார்சன் | 32. வாலிபர் சங்கம் |
| | 33. லிப்ரநாராயணா | 34. விஷ்ணுலீலா |
| | 35. வீரஜகதீஷ் | 36. ஜலஜா |
| | 37. ஹரிஜனசிங்கம் | |
| 1939 | 1. அதிஷ்டம் | 2. ஆனந்த ஆஸ்ரமம் |
| | 3. கிராத அர்ஜீனா | 4. குமார குலோத்துங்கன் |
| | 5. சக்தி மாயா | 6. சங்கராச்சாரியார் |
| | 7. சந்தனத் தேவன் | 8. சாந்த சக்குபாய் |
| | 9. சிரிக்காதே (5 பாகங்கள்) | 1.அடங்காப்பிடாரி, 2. புலிவேட்டை 3. போலி பாஞ்சாலி, 4. மாலைக் கண்ணன், யமவாதனை |
| | 10. சீதா பஹரணம் | 11. சுகுண சரசா |
| | 12. சைரந்திரி | 13. சௌபாக்கியவதி |
| | 14. தியாகபூமி | 15. திருநீலகண்டர் |
| | 16. பம்பாய்மெயில் | 17. பக்தகுமணன் |
| | 18. பாரத் கேசரி | 19. பாண்டு ரங்கன் |
| | 20. பிரகலாதா | 21. மதுரை வீரன் |
| | 22. மன்மத விஜயம் | 23. மாணிக்க வாசகம் |
| | 24. மாத்ருபூமி | 25. மாய மச்சீத்ரா |
| | 26. மெட்ராஸ் எக்ஸ்பிரஸ் | 27. ரம்பையின் காதல் |
| | 28. ராமலிங்க சுவாமிகள் | 29. ராமநாம மகிமை |
| | 30. வீரகர்ஜனை | 31. வீரமணி |

(தொடரும்)


## பூச்சிகளை நீக்கமுடியுமா?



நீண்ட ஆண்டுகள் பரிசீலித்து பூச்சிகளை முற்றாக அழித்த புதிய முறையினால் உங்கள் வீடுகளில் / வியாபார நிலையங்களில் உள்ள பூச்சிகளை முற்றாக நீக்கிட இன்றே தொடர்புகொள்ளுங்கள் காந்தன் :(416) 283-9538


## விண்வெளி

(6ம் பக்க தொடர்ச்சி)

இவற்றை இப்படியே விட்டுவிட்டு **Big Bang** இல் இருந்து தொடர்வோம். **Big Bang** இன் கணத்தில் இருந்தே பிரபஞ்சமானது விரிவடையத் தொடங்கிவிட்டது. அக்கணமே **Space-Time** இன் ஆரம்பக் கணமும் ஆகும். **Big Bang** கணத்தின் போது இருந்த பிரமாண்டமான வெப்பத்தின் காரணமாக பிரபஞ்சமானது அதிஉயர்கதியில் விரிவடையத் தொடங்கியது. பிரபஞ்சம் விரிவடைய விரிவடைய அதன் வெப்பம் குறையத் தொடங்கியது. இதனையே குளிர்தல் என நாம் கூறுவோம். இக்குளிர்தலினால் வெவ்வேறு வெப்ப நிலைகளுக்கு ஏற்ப பிரபஞ்சத்தினுள் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. என்னென்ன மாற்றங்கள் என்னென்ன நிலையில் ஏற்பட்டன என்பவற்றை அடுத்த முறையில் பார்ப்போம்.

## உங்களுக்கு தெரியுமா?

*முதலாவது பல்கலைக்கழகம் ஐரோப்பாவில் இத்தாலி நாட்டில் உள்ளது. இது 1088ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இங்கிலாந்தில் உள்ள ஒக்ஸ்போட் (Oxford) பல்கலைக்கழகம் 1167ல் தொடங்கப்பட்டது. இதுவே இங்கிலாந்தில் உள்ள முதலாவது பல்கலைக்கழகம் ஆகும். அமெரிக்காவில் அமைந்துள்ள ஹாவாட் (Harvard) பல்கலைக்கழகம் பழைமை வாய்ந்ததாகும். 1636ம் ஆண்டு தொடங்கப்பட்டது. கனடாவின் பழைமையான பல்கலைக்கழகம் கிங்ஸ் கொலிஜ் (King's College) ஆகும். 1789ம் ஆண்டு பல்கலைக்கழகமாக்கப்பட்டது. உலகில் உள்ள பல்கலைக்கழகங்களில் ஆகக்கூடுதலான மாணவர்களைக் கொண்ட பல்கலைக்கழகம் யூனிவேசிற்றி ஒவ் நியூயோர்க் (University of New Yoek) இங்கு 150,000ற்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்ளனர்.*

## நான் வாழப் போகிறேன்

-வீணை மைந்தன்

(சுவடு 17ன் தொடர்ச்சி)



சிவாஜி அவர்களுடைய தொழில் ஈடுபாட்டைப் பற்றிக் குறிப்பிடும் திரு. 'சோ' அவர்கள், "சிவாஜி ஒரு பெரிய நடிகர்" தொழிலில் மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் உள்ளவர். ஷாட் முடிந்தாலும் சிவாஜி செட்டை விட்டு வெளியே போகமாட்டார். அனேகமாக எல்லா நடிகர்களுமே ஷாட் முடிந்ததும் செட்டை விட்டு வெளியே சென்று வருவார்கள். ஆனால் சிவாஜி உள்ளே எவ்வளவு புழுக்கமாக இருந்தாலும் செட்டை விட்டு வெளியே வரமாட்டார். அடுத்த ஷாட்டில் அவர் நடிக்கவில்லை என்றாலும் உடன் நடிக்கும் நடிகர்களின் நடிப்பைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பார்.

ஒரு முறை சிவாஜியுடன் நடித்துக் கொண்டிருக்கும் போது, நான் செட்டை விட்டு வெளியே வந்தேன். நடிகர் ஸ்ரீகாந்தும் என்னுடன் வந்தார். செட்டிற்கு வெளியே நின்று சிறிது நேரம் அரட்டை அடித்துவிட்டு இருவரும் உள்ளே வந்தோம். உள்ளே வந்ததும் சிவாஜி, ஸ்ரீகாந்தைக் கூப்பிட்டு, "அவன்" (சோ) வெளியே போனான் என்றால் நீயும் ஏன் போனாய்! அவனுக்கு எதிலும் அக்கறையில்லை . இந்த நடிப்புத் தொழில் இல்லாவிட்டால் வக்கீல் தொழில் இருக்கிறது என்பான். உனக்கு அப்படியல்ல. உனக்கு நடிப்புத்தான் தொழில். அடுத்த ஷாட்டில் அவன் ஒரு யோக்கடிப்பான். அதில் எல்லாமே சரியாய் போய்விடும். உனக்கு அதுவும் செய்யத் தெரியாது. உன்னுடன் கூட நடிக்கும் நடிகன் ஒரு ஷாட்டில் எப்படி நடிக்கிறான். அதற்கு ஏற்றாப்போல் நாம் எப்படி நடிக்க வேண்டும் என்பதெல்லாம் கவனித்துப் பார்த்தால் தான் தெரியும். இதெல்லாம் தெரிந்து கொள்ளாமல் நீங்களெல்லாம் என்ன நடிக்கப் போகிறீர்கள்.

செட்டிலேயே உட்கார்ந்து மற்றவர்கள் நடிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கும் நான் என்ன பைத்தியக்காரனா? என்று லெக்சரே அடித்துவிட்டார். தொழில் மீது அவர் கொண்டுள்ள அக்கறைக்கு இது ஓர் உதாரணம். இவ்விதம் நூற்றுக்கணக்கான சம்பவங்களை அவரது உயர்ந்த தொழில் பக்திக்கு உதாரணமாக என்னால் எழுதமுடியும். அப்படியொரு பக்தியும் ஈடுபாடும் இருந்தபடியால் தான் தமிழ் சினிமாவில் சிவாஜி அவர்களது ஆரம்பகால பதினைந்து ஆண்டு காலக் கட்டம் சினிமாத் தொழிலை நம்பி முதலீடு செய்பவர்களது பொற்காலமாகக் கணிக்கப்படுகிறது.

அக்கால கட்டத்தில் ஆண்டுக்கு நாற்பது நாற்பத்தி ஐந்து திரைப்படங்கள் தமிழில் வெளிவரும் போது அவற்றுள் ஆண்டொன்றுக்குச் சராசரி எட்டுப் படங்கள் சிவாஜி நடித்த படங்களாகும். தமிழில் தயாராகும் மொத்தப் படங்களில் ஐந்தில் ஒரு பங்கில் (20 சதவீதம்) அவர்தான் நடித்து வந்தார்.

அதாவது தமிழ்ப்படவுலகின் வியாபாரத்தில் ஐந்தில் ஒரு பங்கு சிவாஜியை நம்பியே நடந்து வந்தது. இப்போது உள்ள மெகா ஸ்ரார், சுப்பர் ஸ்ரார், சுப்ரீம் ஸ்ரார் நடித்து வெளியாகும் படங்களில் எத்தனை நூறு நாட்களையும் ... வெள்ளி விழாக்களையும் கண்டுள்ளன.....?

அக்கால கட்டத்தில் நடிகர் திலகம் பங்கேற்று நடித்த படங்களில் பெரும்பாலானவை நூறு நாட்களைக் கடந்தவை என்பதும், வெள்ளி விழாக்களைக் கொண்டாடியவை என்பதும் தமிழ் சினிமா வரலாற்றைப் புரட்டினால் தெரியவரும். ஆகவே ஒரு காலகட்டத்தில் சிவாஜி அவர்களை தமிழ் சினிமாவில் பொன்முட்டையிடும் வாத்து என்று குறிப்பிடலாம். தானும் வாழ்ந்து தன்னை நம்பி முதலீடு செய்பவர்களையும் வாழவைத்த கற்பக விருட்சம் சிவாஜி அவர்கள் ஆகும்!

## சுவடு 18

பொதுவாழ்வில் ஒரு ஆணின் உயர்வுக்கும் வெற்றிக்கும் உறுதுணையாகவும் ஆதரவாகவும் இருந்து ஒரு அமைச்சருக்குரிய அறிவாற்றலுடன் வழிநடத்தக் கூடிய இருவரின் பங்கு அதி முக்கியம் வாய்ந்தது. யார் அந்த இருவர்?
நல்ல நண்பன் ஒருவர், அடுத்தவர் வாழ்க்கைத் துணைவி.

இந்த இருவரையும் சரிவரப்பெற்ற அதிஷ்டசாலி நமது நடிகர் திலகம் அவர்கள். சிவாஜி அவர்கள் தனது வாழ்நாளில் பெற்ற விருதுகளிலெல்லாம் அதிஉயர் விருதாக நான் கருதுவது மகாலஷ்மி போன்ற அவருடைய இல்லத் துணைவியாராகும்.

கவியரசு கண்ணதாசன் பாடியது போல் "ராஜாமணி எனும் அன்னை முகத்தில் நலம் பெற விளங்கும் குங்குமம்" (சிவாஜி அவர்களின் அன்னையார்) போன்ற தெய்வீகப் பொலிவுடன் நெற்றிநிறைந்த குங்குமத் திலகத்துடன் இணைந்தபடியால் தான் இன்று வரை இந்த நடிகர் திலகம் ஒளி குன்றாமல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். இது தெய்வத்தின் வரப்பிரசாதம். அந்தக் கலைச் சூரியன் வெற்றிப் பயணத்தை தூர இருந்தே அவதானித்துக் கொண்டிருப்பவன் என்ற விதத்திலும், அருகேயிருந்து அளவளாவியவன் என்ற வகையாலும் அவரது வாழ்வின் வெற்றிக்கு உறுதுணையாகவிருந்து வரும் துணைவியாரின் பங்கு எத்துணை அளப்பெரியது என்பதை நன்கு உணர்ந்தவன் நான்.

எத்தனையோ புகழ் பெற்ற கலைஞர்களினதும், பிரமுகர்களினதும் குடும்ப வாழ்வு எப்படியெல்லாமோ திசைமாறி தடுமாறி உருக்குலைந்ததையும் பார்த்திருக்கிறேன், அறிந்துமிருக்கிறேன்.

1952ல் ஆரம்பித்த இவரது இல்வாழ்கைப் பயணம் இன்று வரை ஆண்டவன் கட்டளையில் அவர் பாடி நடித்தது போல் அமைதியான நதியினிலே ஓடம் போன்று தென்றலைத் தழுவிக் கொண்டு செல்கிறது.

சொந்த வாழ்க்கையில் எவன் வெற்றிபெறுகிறானோ அவனால் தான் பொதுவாழ்விலும் சரி, கலை-வாழ்விலும் சரி வெற்றிகளைத் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்பதற்கு உதாரண தலைவன், தலைவியாக வாழ்பவர்கள் திரு. திருமதி சிவாஜிகணேசன் தம்பதிகள்.

அது போன்றுதான் அவரது நம்பிக்கைக்குரிய நட்பும். **"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத் தகநக நட்பது நட்பு"** என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கொப்ப பல நல்ல நண்பர்களைப் பெற்றவர் சிவாஜி அவர்கள். அதிலும் குறிப்பாக அவரது நீண்டநாள் நண்பர் சேலம் செல்லமுத்து அதிமுக்கியம் வாய்ந்தவர். அப்போது அருகில் சோபாவில் தூய கதராடை அணிந்து அமர்ந்திருந்த ஒருவரை அழைக்கிறார் நடிகர் திலகம் "இவனைத் தெரிகிறதா..."? என்று செழியனைப் பார்த்து கேட்கிறார். அறிமுகப்படுத்தப்பட்டவரைப் பற்றி கோவை செழியன் சொல்ல யோசித்த போது, தயங்காமல் நடிகர் திலகம் "இவன் என் பால்ய நண்பன்" ..செல்லமுத்து... சேலத்தில் இருக்கிறான்..... நடிகர் திலகம் முடிப்பதற்கு முன்னரே கோவை செழியன் புரிந்து கொண்டு "ஊட்டிவரை உறவு" படத்தின் போது ஏற்காட்டில் செல்லமுத்துவைச் சந்தித்த நிகழ்ச்சியை சொல்லி நினைவு கூர்ந்தார்.

- சுவடுகள் தொடரும்.....

# விளையாட்டுத் தகவல்கள் (16)

எஸ். கணேஷ்



## BLUE JAYS மீண்டும் வெல்லுவார்களா WORLD SERIES ஐ ???

தற்போது World Series இன் இறுதிப்போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வேளையில் Blue Jayயை பற்றி பார்ப்போம். கடைசி இரு மாதங்களில் Blue Jay இன் வேகமான விளையாட்டு Jay World Seriesக்கு போனாலும் போக கூடும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. ஆனாலும் Blue Jays இறுதிவரை போராடினார்கள். இவற்றை எல்லாம் நோக்கும் போது 1993ம் ஆண்டுக்கு பின்னர் 1998ம் ஆண்டே Jays இன் பெறுபேறுகள் மீண்டும் பிரகாசிக்கத் தொடங்கி உள்ளன எனக் கூற வேண்டும். Jays இன் நிலைமை மிகவும் பலமான நிலையிலேயே இவ் Season முடிவடைந்து உள்ளது. கடைசி இரண்டு மாதமும் 34 வெற்றிகளை மட்டும் பெற்றதோடு நில்லாமல் கடைசியாக American League இல் முதலாவது Winnig Percentage (.654)இருமாதங்களிலும் பெற்றுள்ளனர். Jays இன் இறுதி பெறுபேறுகள் அடுத்த வருடம் எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியுள்ளது.

July மாதம் American League இல் 12.5 போட்டிகள் பின்னுக்கு நின்றவர்கள் September இறுதியில் நான்கு போட்டிகளை Bostonக்கு பின்னால் வந்துள்ளார்கள். மொத்தத்தில் 88 வெற்றிகளையும் 74 தோல்விகளையும் பெற்று .543 Average பெற்றுள்ளார்கள். இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் கடைசிப்போட்டி Detroit க்கு கெதிராக விளையாடிய போட்டியில் புதிதாக இளம் Pitcherயையும் அறிமுகப்படுத்தி உள்ளனர். இளம் வீரரான Halladay இறுதிப்போட்டியில் தொடர்ந்து 9 Innigs உம் எறிந்து ஆக ஒரே ஒரு Hit மட்டுமே கொடுத்து 8 Strike out எடுத்து திறம்பட வெற்றியை Jays க்கு ஏற்படுத்தி கொடுத்தார்.

இவ் வருடம் முக்கியமாக Jays இன் சாதனைக்கு காரணமாக இருந்தவர் Pitcher Roger Clemens என்று கொள்ளல் மிகையாகாது. "Rocket" என்று செல்லமாக அழைக்கப்படும் இவர் இவ்வருடம் 20-6 என்ற வெற்றி பெற்றுள்ளார். 2.65 Era எடுத்த இவர் முழு American League இலும் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார். இதன் மூலம் முதலாவது Pitcher 5வது தடவையாக CY Yonge விருதை பெற உள்ளார்.

அடுத்து இவ்வருடம் Jaysஇன் Super Stars என்று சொன்னால் முதலாவது ஆக Canseco அடுத்து Carlos Delgado, Shawngreen ஆகும். இவ்வருடம் Jays World Series க்கு போக முடியாவிட்டாலும் பல சாதனைகளை இவ்வருடம் நிகழ்த்தி உள்ளார்கள். இவ்வருடம் மொத்தமாக 221 Home Run களையும் 184 Stolen Bases யையும் எடுத்து சாதனை படைத்துள்ளார்கள். அத்துடன் Best Era 4.25 எடுத்து சாதனை படைத்துள்ளார்கள். July, August மாதத்தில் இப்படியான பெறுபேறுகளை பெற்றிருந்தால் இவ்வருடம் Jays நிட்சயமாக வெற்றி பெற்றிருக்கும்.

Mayor League Standings (முழுவதுமாக)

| | Lins | Lost | Percentage |
|---|---|---|---|
| Newyork | 114 | 48 | .704 |
| Houston | 102 | 73 | .630 |
| San diego | 98 | 64 | .605 |
| Boston | 92 | 70 | .568 |
| Chicago (mets) | 89 | 73 | .549 |
| Blue jays | 88 | 74 | .543 |

இப் பெறு பேறுகளைப் பார்க்கும் போது இதுவே முதல் தரம் Jays இன் 3 வீரர்கள் 100 RBI க்கு மேல் எடுத்துள்ளனர். அத்துடன் Canseco 46 Home runs, Jays Club இல் முதலாவது Batting சாதனையாகும்.

Mayor League இல் எல்லாமாக 30 Teams பங்குபெறுகின்றன. இவ் மொத்தத்தில் Jays 6வது இடத்தையும், American League இல் 3 வது இடத்தையும் பெற்றுள்ளார்கள். இனி Jays இன் வீரர்களின் பெறுபேறுகளை பார்போம்.

Batting

| | HOMERUNS | RBI | RUNS | AUG. |
|---|---|---|---|---|
| CANSECO | 46 | 107 | 98 | .237 |
| DELGADO | 38 | 115 | 94 | .292 |
| GREEN | 35 | 100 | 106 | .278 |
| TONY FERNANDEZ | 9 | 72 | 71 | .321 |
| GONZALEZ | 13 | 51 | 70 | .239 |
| STEWART | 12 | 55 | 90 | .279 |


அத்துடன் Tony Fernandez Batting இல் .321 Average பெற்று முதலாவது இடத்தில் உள்ளார்.


1999ம் ஆண்டு Jays Canseco, Tony ஆகியோரை மீணடும் Sign பண்ணும் என்று நம்பப்படுகிறது. அத்துடன் Halladay இறுதி பெறு பேறுகளையும் பார்க்கும் போது 1999ம் ஆண்டு மீண்டும் Jays இன் எதிர்க்கலாம் மிகவும் பிரகாசமாகவே தெரிகிறது.

PITCHING பெறுபேறுகளை பார்ப்போம்

| | WINS | LOST | ERA |
|---|---|---|---|
| CLEMENS | 20 | 6 | 2.65 |
| HALLADAY | 1 | 0 | 1.93 |
| ESCOBAR | 7 | 3 | 3.73 |
| CARPENTER | 12 | 7 | 4.37 |
| HENTGEN | 12 | 11 | 5.17 |
| PLESAC | 4 | 3 | 3.78 |
| PERSON | 3 | 1 | 7.04 |


இவ்வருடம் Hentgen இன் பெறுபேறுகள் நன்றாக இருக்கவில்லை. அவரின் சுகவீனம் காரணமாக. ஆனால் அடுத்த வருடம் Clemens, Escobar, Carpenter, Hentgen, Halladay. இந்த ஐவரும் Starting Pitcher களாக இருந்தால் Jayஇன் பலம் அசைக்க முடியாமல் இருக்கும். அத்துடன் Person, Quantrill, இருவரும் சிறப்பாக Closer Roll ஐ செய்யக் கூடிவயர்கள். ஆகவே 1999இல் Jays World Series எட்டிப் பிடிப்பார்கள் என்றே ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.







| | | | |
|---|---|---|---|
| கிரகப் பொருத்தம் பார்த்தல் | 3 | 4 | சாதகக் குறிப்பு கணித்தல் |
| ல | யோ கா சோ தி ட ம் | (416) 299-8361 | 6 |
| 12 | | | எண்சோதிடப்படி ஆலோசனை கூறுதல் |
